மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# இலவச மருத்துவ முகாம்!

## 28–ந் தேதி வரை நடைபெறுகிறது!!

சென்னை, பிப்.25–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின்நலனுக்காக இலவசபொதுசுகாதாரமருத்துவ முகாம் பிப்ரவரி 28–வரை காலை 8 மணிமுதல் 12மணிவரைமற்றும்மாலை 4 மணிமுதல் இரவு 7 மணி வரை மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

இந்த இலவசபொதுசுகாதாரமருத்துவமுகாம்நேற்று சைதாப்பேட்டை மெட்ரோ ரெயில்நிலையத்தில்காலை 8 மணி முதல் 12 மணி வரையும் ஆலந்தூர், ஏஜி டி.எம்.எஸ். ஆயிரம் விளக்கு, திருமங்கலம் மற்றும்சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையங்களில் மாலை 4 மணி முதல் இரவு7மணிவரையும்நடைபெற்றன. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோஊழியர்கள்காலையில் 115 பேரும் மாலையில் 480 பேர் உட்பட சுமார் 595 பேர் இந்த முகாமில் பயனடைந்தனர்.

இந்த இலவசபொதுசுகாதார மருத்துவ முகாமில் பி.எம்.ஐ. (உயரம் மற்றும் எடை), ரத்தஅழுத்தம், சீரற்ற ரத்தசர்க்கரைமற்றும்ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த இலவசபொதுசுகாதார மருத்துவ முகாம் 28–ந் தேதி வரை நான்கு நாட்களுக்கு சென்ட்ரல் மெட்ரோ ஏஜி டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல்,

ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் மெட்ரோ ஆகிய 12 மெட்ரோ ரெயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரை மற்றும்மாலை4மணிமுதல் இரவு7மணிவரைநடைபெறுகிறது.

மெட்ரோரெயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்ற மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச பொது மருத்துவமுகாம் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற மருத்துவ முகாமை படத்தில் காணலாம்.